# NAMMA VEEDU

Montessori House of Children

(PRE-PRIMARY PLAY SCHOOL)

Office : 564, High School Road, Sendurai Post, Natham Taluk, Dindigul Dt. - 624403. Ph. No. 04544 - 266696.


aஅனுப்புநர்

முனைவர். மோ. மாதேஸ்வரன்,
நிறுவநர், நம்ம வீடு மாண்டிசொரி பள்ளி,
செந்துரை, திண்டுக்கல் மாவட்டம்.

பெறுநர்

செல்வி. கலைவாணி

அன்புடையீர்,

பொருள்: ஆசிரியர் பணி நியமனக் கடிதம்

தாங்களின் கல்வித் தகுதி மற்றும் ஆசிரியர் பணியின் பால் கொண்டுள்ள ஈடுபாட்டின் அடிப்படையில் நம்ம வீடு மாண்டிசொரிப் பள்ளியின் ஆசிரியராக நியமிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறோம்! தாங்களின் பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு கல்விச் சான்றிதழ்களின் நகல் மட்டுமே எங்களிடம் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஜனவரி மாதத்தில் தாங்கள் டிப்ளமா தேர்வினை முடித்தவுடன் பணியினைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். தேர்வில் தேர்ச்சி பெற்றவுடன் சான்றிதழின் நகல் படிவத்தினைப் பள்ளியிடம் தருமாறு கேட்டுக் கொள்கிறோம். பணியில் சேர்ந்து ஆறுமாத காலத்திற்குப் பின் தாங்களின் வேலைத் திறனைப் பொறுத்துத் தங்களைப் பணி நிரந்தரம் செய்வோம் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

தாங்களின் மாத ஊதியம் ரூபாய் ஆயிரம் ஆகும். அத்தொகை மாதம் தோறும் ரொக்கமாகவே எவ்விதப் பிடிப்பும் இன்றி தரப்படும். தாங்களின் கல்வித் தகுதி, ஆங்கில மொழித் திறன், பணித் திறன் முதலியவற்றின் வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் ஆண்டுக்கு ஒருமுறை ஊதியத் தொகை உயர்த்தப்படும்.

எக்காரணத்தினை முன்னிட்டும் தாங்கள் பள்ளியை விட்டு விலகு வேண்டுமானால் குறைந்த பட்சம் மூன்று மாத அவகாசத்தில் பள்ளிக்கு அறிவிப்புக் கடிதம் வழங்க வேண்டும், அல்லது ஒரு மாத முன்னறிவிப்புக் கடிதத்தினையும் ஒரு மாத ஊதியத் தொகையினையும் பள்ளிக்குத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் இக்கடிதத்துடன் பள்ளியின் விதிமுறைகள் தரப்பட்டுள்ளன. அதை நன்கு படித்து ஏற்புடையதாயின் கையொப்பம் இட்டு மற்றொரு படிவத்தினைப் பள்ளியிடம் தருமாறு கேட்டுக் கொள்கிறோம். பள்ளியின் விதிமுறைகளின் படி ஆசிரியப்பணியினை மேற்கொள்ளவில்லை எனில் தாங்களை ஒரு மாத கால அறிவிப்பின் பேரில் பணி நீக்கம் செய்யவும் நேரிடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

தாங்களின் ஆசிரியப் பணி நன்கு நடைபெற வாழ்த்துக்கள்!

நன்றி!
இப்படிக்கு

தாங்கள் உண்மையுள்ள,

[ மோ. மாதேஸ்வரன் ]